**World Christian Fellowship**
www.wcflondon.com
wcflondon@gmail.com

# *கலாத்தியர்*
# *பாடம் 14 சிலுவையிலரயப்பட்டும் பிழைத்து இருத்தல்*

***கலாத்தியர் 2:19-21, 19. தேவனுக்கென்று பிழைக்கும்படி நான் நியாயப்பிரமாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேனே. 20. கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப் பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன். 21. நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறதில்லை; நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே.”***

## *பின்விளைவு*

*வாத்துகளை வேட்டையாடுபவர் தன் நண்பரோடு இருந்தார், பரந்த வெளியான இடத்தில் தூரத்தில் ஒரு புகை மேகம் போன்று எழுப்புவதை பார்த்தார். ஏதோ புதர் கட்டுக்கு அடங்காத வகையில் பற்றியெரிகிறது என்று உணர்ந்தார். அவர் தன்னுடைய அரைப்பையில் தீப்பெட்டி இருப்பதை கண்டு வெளியே எடுத்தார். அவர் அதை சுற்றி சிறியதாக நெருப்பை பற்ற வைத்தார், அவைகள் வெளியே சிறிய வகையில் நெருப்பை கக்கின, சிறிது நேரத்திலேயே அது அந்த புதர் முழுவதையும் சுட்டெரித்தது.*

*சீக்கிரத்திலேயே அவர்கள் முற்றிலும் கருகிப்போன ஓர் சிறிய வட்டத்திற்குள் நின்று கொண்டு இருந்தனர், ஒரு மிகப்பெரிய புதர் நெருப்பு வருமென காத்திருந்தனர். அந்த பட்சிக்கிற அக்கினி அவர்கள் அருகே வந்த போது அவர்கள் தங்களுடைய வாய் மற்றும் மூக்கை கைக்குட்டையால் பொத்தி கொண்டு நின்றனர். அக்கினி அவர்கள் அருகே சீறி வந்து அவர்களை கடந்து சென்றது.*

*ஆனால் அது அவர்களை சிறிதும் தொடவும் இல்லை, காயப்படுத்தவும் இல்லை. அக்கினி தான் ஏற்கனவே பட்சித்ததை எரிக்காது.*

*இது தான் கிறிஸ்தவர்களின் இருதயம், கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தின் உறுதியான அஸ்திபாரம். இது ஒரு மனுஷனின் வாழ்க்கையில் உண்மையாக நிறைவேறவில்லை என்றால் அவர் தொடர்ந்து தோல்விகளையும் வீழ்ச்சிகளையும் சந்திக்க நேரிடும்.*

*நாம் நமக்காக மட்டுமே வாழும்போது, கஞ்சத்தனம் தான் மிஞ்சும். ஏனென்றால் நம்முடைய மாம்சத்தில் நல்ல விஷயங்கள் ஏதும் கிடையாது. (ரோமர் 7:18)*

*கிறிஸ்துவின் அடி சுவடுகளை பின்பற்றவும், அவரின் சித்தத்தை செய்யவும், அவரின் கற்பனைகளை பின்பற்றவும் ஒருவரும் தன் சுய பெலத்தை சார்ந்து இருக்க முடியாது.*

*நம்முடைய மாம்சம் என்பது*

- *முழுவதும் வக்கிரமானது,*
- *சீர்படுத்த முடியாதது,*
- *உதவியற்றது, மற்றும்*
- *சாத்தியமற்றது.*

*நாம் எந்த அளவுக்கு நன்மையான காரியங்களை செய்ய பார்க்கிறோமோ, அதை செய்து முடிக்க இது நம்பிக்கையற்றது.*

*களவு நிறைந்த, மாற்ற முடியாத இந்த மனிதனை வைத்துக்கொண்டு நாம் என்ன செய்ய முடியும்?*

*என்றைக்கு இந்த நிலையை நாம் அடையாளம் கண்டுபிடித்து அறிந்து கொள்கிறோமோ, நாம் துக்கம் அடைந்து நமக்கு ஒரு தேவை இருக்கிறது என்ற நிலைக்கு வருகிறோம். எனவே தேவன் நம்முடைய கண்களை திறந்து நாம் அவரோடு கூட சிலுவையிலரயப்பட்டதை வெளிப்படுத்த வல்லமை உள்ளவர், அவர் நம்முடைய கடன்கள் தீர்க்கப்பட்டது என்பதற்கான அத்தாட்சி மட்டுமல்ல தன்னையே அதற்காக தந்தவர் அவர் தான்.!*

*இவைகள் கிறிஸ்துவின் கிரியைகளில் சேர்க்கப்பட்டாயிற்று!*

## ***நியாயப்பிரமாணம்***

*நியாயப்பிரமாணமானது ஒரு புதர்த்தீ போன்றது, அதிலிருந்து நாம் தப்பிக்க முடியாது. ஆனால் நாம் ஏற்கனவே சுட்டெரிக்கப்பட்ட இடத்தில் நின்றால் நம் தலை மயிரை கூட எரிக்கமுடியாது.*

*கல்வாரி சிலுவை என்பது ஏற்கனவே சுட்டெரிக்கப்பட்ட இடம் போல. அதில் நாம் தஞ்சம் அடைந்தால் நியாயப்பிரமாணத்தின் ஆதிக்கத்திலிருந்து நாம் தப்பித்தோம்.*

*பவுல் இங்கு என்ன சொல்ல வருகிறார் என்று நமக்கு விளங்க வேண்டுமானால், நமக்கு அது எழுதப்பட்ட சூழல் தெரிய வேண்டும்!*

*கலாத்தியாவில் உள்ள சபையோர் கள்ள போதகர்களால் துன்புறுத்த படுகிறார்கள், ஜுடேசர்ஸ் அதாவது யூதமதவாதிகள் என்று அழைக்கப்பட்டவர்கள் நாம் விசுவாசத்தால் இரட்சிக்கப்பட்டு இருக்கும்போது, அவர்கள் வந்து நீங்கள் முழுமை பெறவேண்டுமானால் கிரியைகளை கடைபிடிக்க வேண்டும் என போதிக்கின்றனர்.*

*இந்த ஜுடேசர்கள் ஒருவர் தான் பெற்றுக்கொண்ட இரட்சிப்பை காத்துக்கொள்ள மோசேயின் மூலம் கொடுக்கப்பட்ட கிரியைகளை கடைபிடிக்க வேண்டும் என போதித்தனர். அவைகள் வெறும் நீதிமார்க்கமாக மட்டும் போதிக்கப்படாமல் அதை சடங்குகளாக பின்தொடர போதித்தனர்.*

- ✓ *விருத்தசேதனம்,*
- ✓ *ஓய்வு நாட்களை கடைபிடித்தல், மற்றும்*
- ✓ *எல்லா பண்டிகைகள் மற்றும் விருந்து நாட்கள்*

*கலாத்திய சபையாருக்கு ஆவிக்குரிய தகப்பனாக, வழிநடத்துபவராக இருந்த பவுல் கிருபையும் கிரியையும் கலந்து விட கூடாது என்பதில் கவனமாய் இருந்தார்.*

*எனவே பவுல் தன்னுடைய இந்த கடிதத்தில் மிகவும் கடினமாக எச்சரிக்கிறார், அவர்கள் ஆனந்தத்தோடு பெற்றுக்கொண்ட சுவிசேஷத்தை விட்டு இவ்வளவு சீக்கிரமாய் வேறொரு சுவிசேஷத்திற்கு திரும்பியதை கண்டு மிக வன்மையாக கண்டிக்கிறார்.*

*இந்த அதிகாரத்தின் கடைசி 3 வசனங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையின் முக்கியமான சத்தியத்தை நமக்கு தெளிவாக விளக்குகிறது!*

பவுல் கலாத்தியாவில் உள்ள ஜுடேசர்கள் மற்றும் அவர்களின் போதகத்தை எதிர்த்து பேசிய போதும் அவர்கள் செய்த தவறுகள் இன்றும் நம் சபைகளில் வாழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன. நீங்கள் எப்பொழுது எல்லாம் உங்கள் மதம் மற்றும் தேவனோடு உள்ள உறவு உங்களின் கிரியைகளை சார்ந்தது, கிறிஸ்துவின் கிரியைகளை சார்ந்தது அல்ல என்ற பிரசங்கம் கேட்கிறீர்களா அப்பொழுது ஜுடேசர்கள் செய்த அதே தவறை நீங்களும் செய்கிறீர்கள் என்று அர்த்தம்!

- உடை உடுத்துவது, நடனம் ஆடுவது, ஒரு இடத்திற்கு செல்வது போன்றவற்றை ஒரு கட்டளையாக கட்டுப்பாடாக உங்களுக்கு போதிக்கப்பட்டால், நீங்கள் ஜுடேசர்களுடைய போதகத்தை கேட்கிறீர்கள் என்று அர்த்தம்.
- அலங்காரம் செய்வது, குறைவான உடை உடுத்துவது, அல்லது யாரையும் பாதிக்காத சுவிங்கம் சாப்பிடுவது போன்றவற்றை பற்றி போதித்தாலும் நாம் திரும்பவும் கலாத்தியரை பார்க்க வேண்டும்.
- ஒரு நாளில் அதிக நேரம் வேதாகம வாசிப்பு, ஜெபம், அல்லது தசமபாகம் செலுத்துவது அல்லது ஊழியம் செய்வது அல்லது வாரத்திற்கு 3 ஜெப கூடுகைக்கு செல்வதால் மட்டுமே நீங்கள் உண்மையான கிறிஸ்தவர்கள் என்று அறிவுறுத்தப்பட்டால் இவைகள் ஜுடேசர்களின் கிரியைகளே.

ஆண்டவரோடு நமக்கு இருக்கும் உறவு நாம் செய்கிறோம் என்பதை பொறுத்து அல்ல, அவர் என்ன செய்து முடித்தார் என்பதை பொறுத்தது!

*அப்படியானால் நாம் என்ன செய்கிறோம் என்பது முக்கியமா?*
*கண்டிப்பாக!*
*ஆனால் தேவனுக்கு முன்பாக நிற்பது மற்றும் அவருடன் ஆனா உறவுக்கு அல்ல*

*ஜுடேசர்களின் கூற்றுக்கு மாறாக கூற வேண்டுமானால்,*

- ✓ *நாம் கிருபையினால் இரட்சிக்கப்படவில்லை - அப்படியானால் போய் கிரியை செய்யுங்கள்*
- ✓ *நாம் விசுவாசத்தால் துவக்க முடியாது - அப்படியானால் போய் சுய பெலத்தை சார்ந்து கொள்ளுங்கள்*
- ✓ *கிருபையினால் துவக்கி, விசுவாசத்தால் பெற்று அனுபவித்து கொண்டு இருப்பதை கிருபையின் மூலம் விசுவாசத்தால் மட்டுமே முடிக்க முடியும்*

***வ 19, தேவனுக்கென்று பிழைக்கும்படி நான் நியாயப் பிரமாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேனே***

*கிறிஸ்துவை பின்பற்றுகிற நமக்கு இரண்டு விதமான கால வித்யாசங்கள் உள்ளன!*
***கி.மு. மற்றும் கி.பி***
***கிறிஸ்துவுக்கு முன்னால் மற்றும் கிறிஸ்துவுக்கு பின்னால்***

*கிறிஸ்துவுக்கு முன்னால் நம்முடைய வழக்கை பாவம் நிறைந்ததாய் மற்றும் தேவனுக்கு விரோதமாய் காரியங்கள் செய்வதாய் இருந்தது, இவைகள் வெளிப்படையானவை நுட்பமானவை*

*தேவனுடைய கற்பனைகள், மோசேக்கு கொடுப்பட்ட கற்பனைகள் மூலம் விளக்கப்பட்டது, அவைகள் நம்முடைய பாவத்தின் உண்மையான தோற்றத்தை வெளிக்காட்டின*

*மற்றும் நம்முடைய உள்ளான மனுஷனின் பொல்லாத கிரியைகளை வெளிக்காட்டின*

- *அந்த கற்பனைகள் சரி மற்றும் அவை நல்லவை என்பதை நாம் புரிந்து கொண்டோம்*
- *ஆனால் அவைகளை நம்மால் பின்பற்ற முடியவில்லை*
- *அதனால் வரும் தண்டனை மரணம் ஆகும்!*

*எனவே நியாயப்பிரமாணங்கள் நம்மை நீதியை செய்ய ஊக்குவிக்கவில்லை, நம்முடைய உள்ளத்தில் இருப்பவைக்கு எதிராக கிளர்ச்சி செய்ய தூண்டியது!*

***ஒரு வாலிபன் பூங்கா (Theme park) செல்லும் கதை.***

*அங்கு வேலி தடவாளங்களை சுற்றிலும் ஒரு குறிப்பு எழுதப்பட்டு இருந்தது. அந்த வாலிபன் அங்கு நீண்ட நேரம் காத்திருந்தான் தன் நாளை கொண்டாட, அந்த வேலியை மீற அவன் நினைத்தது இல்லை! அவன் அந்த வேலி மீது நீண்ட நேரம் சாய்ந்து கொண்டு இருந்தான், ஆனால் அங்கு ஒரு வாசகம் எழுதி இருக்கிறது அதை தாம் மறைக்கிறோம் என்று அவனுக்கு தெரியவில்லை.*

*அவன் வரிசையில் நிற்கும் போது அந்த வாசகம் எவ்வளவு அழகாக ஜொலித்தது என்று பார்த்தான். அவன் அதில் என்ன எழுதி இருக்கிறது என்று உற்று பார்த்தால் தொட வேண்டாம் என எழுதி இருந்தது. அது அவனை தொட்டு பார்க்க ஈர்த்தது, ஆம் அவன் அதை தொட்டுவிட்டான்!*

*அவன் சகா வாலிபர்களோடு ஒப்பிட்டு பார்த்தால் அவன் மிகவும் நல்ல பையன், கீழ்படிதலுள்ள பையன்.*

*இன்றைக்கு நாம் எல்லாரும் தேவனால் அளிக்கப்பட்ட பிரமாணத்தினால் மட்டுமே அளக்க படுகிறோம். நம் இருதயத்தின் ஓரத்தில் எங்கயோ இவைகளை எதிர்த்து போராட்டம் நடந்து கொண்டு தான் இருக்கும் என்பதை நாம் அறிவோம்!*

*ஒருமுறை நாம் தூண்டப்பட்டாலே நாம் நியாயம் தீர்க்கப்பட்டு குற்றவாளியாகிறோம். மரணம் தான் தண்டனை!*

*எனவே பவுல் சொல்லுகிறார், பிரமாணங்களின் ஆதிக்கத்தால் நாம் மரிக்கிறோம். நியாயப்பிரமாணங்களுக்கு மரித்த பின்பு நாம் தேவனுக்காக வாழ முடியும்.*

*எப்படி?*
*நாம் எப்படி பிராமணங்களின் சதிகார கோபமூட்ட கூடிய கட்டளைகளிலிருந்து விடுபட முடியும்?*

***வ 20, கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்***

*எப்படி நாம் நியாயபிராமணத்திற்கு மரித்து தேவனுக்கென்று விசுவாசத்தால் கிறிஸ்து மூலம் வாழ்வது என்று பாப்போம்!*

*இந்த வசனம் படிப்பதற்கு கொஞ்சம் முரண்பாடாக தெரிந்தாலும், கிறிஸ்தவ வாழ்க்கையை நன்றாக விளக்குவதாக உள்ளது!*
*நான் கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்பட்டேன்.*

*பவுல் சொல்வதன் அர்த்தம் என்ன?*
*அவர் எப்படி கிறிஸ்துவோடு கூட சிலுவையிலரயப்பட்டார்? எந்த வழியில்?*

*இங்கு பவுல் சொல்லவரும் பதம் என்னவென்றால் அவர் பழைய வாழ்க்கையின் முடிவில் தன்னை சிலுவையில் இயேசுவோடு கூட அறையப்பட்டதாய் காண்கிறார், எனவே தற்போது அவர் வாழ்ந்து கொண்டு இருக்கும் வாழ்க்கையானது அவரின் பழைய வாழ்க்கையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது.*

*இன்னொரு வகையில் சொல்ல வேண்டுமானால், பவுல் இயேசுவின் விசுவாசத்தால் வந்த மாத்திரத்தில் அவர் தன்னுடைய பாவத்தை உணர்ந்து மனம் திரும்பியது, இயேசுவின் மேல் முழு நம்பிக்கையையும் வைத்து அவர் சிலுவையில் மறித்து விட்டது போல் என்கிறார்!*

*இயேசுவே உண்மையில் அவருக்காக மரித்தார், ஏதோ ஒரு வகையில் பவுலுக்காக காரியங்கள் முடித்துவைக்க பட்டது.*

*ஆதிக்கம் செலுத்திய பிராமணங்கள் மற்றும் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்பட்ட வழக்கை முடிவு பெற்று விட்டதா?*
*அது நம் உள்ளுக்குள் எழும்பிய கிளர்ச்சியை கொன்று போட்டது!*

*எனவே பவுல் சொல்லுகிறார், "நான் கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்பட்டேன் "*

- ✓ *என்றைக்கு இயேசு மரித்தாரோ, அப்பவே பவுலும் மரித்தார்*

- ✓ *எனவே இப்போது இருப்பது புதிய பவுல், அவர் இப்போது வாழும் வாழ்க்கையும் புதியது வித்தியாசமானது*

*நாம் விடுதலையாக இருக்க வேண்டுமானால் ''கிறிஸ்துவோடு கூட மரித்தோம்'' என்ற சிலுவையை பற்றிய வெளிப்பாடு நமக்கு இருக்க வேண்டும்.*

*கிறிஸ்துவுக்குள் மரிப்பதை பற்றி இன்னும் ஆழமாக புரிந்து கொள்ள பவுல் எழுதிய காரியங்களை காண்போம்!*

***ரோமர் 6:5-11, 5. ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்.6. நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். 7. மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே.8. ஆகையால் கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோமானால், அவருடனேகூட பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம்.9. மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம்; மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை.10. அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்; அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார்.11. அப்படியே நீங்களும், உங்களை பாவத்திற்கு மரித்தவர்களாகவும்,***
***நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள்***
***தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள்***

***பிலிப்பியர் 1:21, கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்***

***கிறிஸ்துவோடு கூட மரிப்பது -நீங்களும் மரித்ததாக ஏற்றுக்கொள்ள படும்***

*தேவனுக்காக வாழ்வதில் நமக்கு மிக பெரிய தடையாக இருப்பது எது?*
*பாவம்.*

*வேதம் நமக்கு சொல்லுகிறது நாம் எல்லாரும் பாவம் செய்தவர்கள், நம்மில் நீதிமான் யாரும் இல்லை, நாம் எல்லாரும் தேவ மகிமை அற்றவர்களானோம்.*

***ரோமர் 3:9 & 23, 9. ஆனாலும் என்ன? அவர்களைப் பார்க்கிலும் நாங்கள் விசேஷித்தவர்களா? எவ்வளவேனும் விசேஷித்தவர்களல்ல. யூதர் கிரேக்கர் யாவரும் பாவத்திற்குட் பட்டவர்களென்பதை முன்பு திருஷ்டாந்தப்படுத்தினோமே 23. எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி***

*நாம் பாவத்தோடு போராடிக்கொண்டு இருப்பதை நம்மில் பலர் ஒப்புக்கொள்வது இல்லை.*
*ஆனால் இந்த பிரச்சனை தேவனின் உதவி மூலமே தீர்க்கப் படும், அப்போது தான் நாம் வெற்றி சிறந்து விடுதலையாக வாழ முடியும்.*

*கிறிஸ்துவோடு கூட சிலுவையிலிறையப்பட்ட அனுபவத்தை நாம் சுவைத்து பார்க்க இரண்டு பக்கத்திலும் ஒரு ஒத்துழைப்பு வேண்டும். வெறும் ஒரு பக்கத்தில் மாத்திரம் ஒத்துழைப்பு வந்தால் இந்த சிலுவையிலரயப்பட்ட அனுபவத்தை தொடர முடியாது.*

*நம்முடைய மன கண்கள் திறக்கப்பட வேண்டும்.*

- ✓ *கிறிஸ்து சிலுவையில் மரிக்கும் போது, தேவன் நம்முடைய பாவங்களையும் கிறிஸ்துவின் மேல் செலுத்தி சிலுவையில் அறைந்தார். இது தான் தேவனிடம் இருந்த வெளிப்பட்ட கிரியை. கிறிஸ்து நமக்காக மரித்து நம்முடைய பாவங்களை விலக்கினார். இது 2000ம் வருடங்களுக்கு முன்பு நடந்தது நாம் அதைத்தான் விசுவாசிக்கிறோம்.*

- ✓ *அதேபோல் கிறிஸ்து சிலுவையில் மரிக்கும் போது, தேவன் நம்மை கிறிஸ்துவுக்குள் செலுத்தினார். நம்முடைய பாவங்களும் 2000ம் வருடங்களுக்கு முன்பு தீர்க்கப்பட்டது, நம்முடைய உள்ளான மனிதனும் இந்த காரியத்தில் ஈடுபட்டாயிற்று.*

*தேவன் நம்முடைய பாவங்களை கிறிஸ்துவின் மேல் போட்ட பொழுது, நம்முடைய உள்ளான மனுஷனையும் தேவன் கிறிஸ்துவோடு கூட சிலுவையில் ஏற்றினார்.*

- ➢ *சிலுவையில் நம்முடைய பாவங்கள் விலக்கப்பட்டது.*
- ➢ *சிலுவையில் நம்முடைய உள்ளான மனுஷனும் காரியங்களை முடித்தான்.*

**ரோமர் *6:6,* நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்**

- ✓ *நாம் கிறிஸ்துவோடு கூட சிலுவையில் அறையப்படுவோம் என்று நம்ப வேண்டியது இல்லை.*

- ✓ *நாம் அவரோடு கூட சிலுவையிலரயப் பட்டாயிற்று, என்றைக்கும் மாற்றப்படாத வகையில். தேவன் நம்மை கிறிஸ்துவுக்குள் செலுத்தினார்.*
- ✓ *கிறிஸ்து சிலுவையில் மரிக்கும்போதே நாமும் அவரோடு மரித்தோம்.*

*நீங்கள் எழுதப்பட்ட ஒரு காகிதத்தை எடுத்து அதை கிழிக்கும் போது அதில் உள்ள எழுத்துக்களும் தான் பிரித்து எடுக்கப்படுகின்றன. நீங்கள் காகிதத்தை கிழிக்கும் போது,*

- ➢ *காகிதம் கிழிந்து போகின்றது,*
- ➢ *அதில் உள்ள எழுத்துக்களும் தான் கிழிந்து போகின்றது.*

*பழைய ஏற்பாட்டை நாம் வாசிக்கும்போது நாம் காண்கிறோம் தேவாலயத்தின் திரைச்சீலை நம்மை தேவனுடைய பிரசனத்திலிருந்து பிரிக்கிறது. கேருபீன்கள் அதை காவல் காத்து கொண்டு இருந்தன அவைகளின் உருவங்கள் அந்த திரைச்சீலையில் வரையப்பட்டு இருந்தன.*

***யாத்திராகமம் 26:1, "மேலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலினாலும் இளநீலநூலினாலும் இரத்தாம்பர நூலினாலும் சிவப்புநூலினாலும் நெய்யப்பட்ட பத்து மூடுதிரைகளால் வாசஸ்தலத்தை உண்டுபண்ணுவாயாக; அவைகளில் விசித்திரவேலையாய்க் கேருபீன்களைச் செய்யக்கடவாய்***

*இயேசு கிறிஸ்து மரித்த போது தேவாலயத்தின் திரைச்சீலை மேலிருந்து கீழாக கிழிந்தது* ***மத்தேயு 27:51, அப்பொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும்***

***இரண்டாகக் கிழிந்தது, பூமியும் அதிர்ந்தது கன்மலைகளும் பிளந்தது,***

*திரைச்சீலை இயேசுவை குறிக்கிறது.*
***எபிரெயர் 10:19, ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால்,***

*கேருபீன்களுக்கு மனித முகம், சிங்க முகம், எருதுவின் முகம், மற்றும் கழுகுவின் முகங்கள் இருக்கும், இவைகள் தேவனின் எல்லா படைப்பையும் குறிக்கின்றன.*

***எசேக்கியேல் 1:10, அவைகளுடைய முகங்களின் சாயலாவது; வலதுபக்கத்தில் நாலும் மனுஷமுகமும் சிங்கமுகமும், இடதுபக்கத்தில் நாலும் எருது முகமும் கழுகு முகமுமாயிருந்தன.***

***எசேக்கியேல் 10:20, இது நான் கேபார் நதியண்டையிலே இஸ்ரவேலின் தேவனுக்குக் கீழே இருக்கக்கண்ட அந்த ஜீவன்தானே; அவைகள் கேருபீன்கள் என்று அறிந்து கொண்டேன்***

*என்றைக்கு இயேசுவின் சரீரம் கிழிக்கப்பட்டதோ அக்கணமே எல்லா உயிரினங்களும் பிரிக்கப்பட்டன. அவர் எல்லா சிரிஷ்டிப்புகளுக்கு பதிலாக மரித்தார்.*

***எபிரெயர் 2:9, என்றாலும், தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்***

- ✓ உங்களையும் சேர்த்து எல்லா பழைய படைப்புகளும் ஒழிந்து போயின.
- ✓ உங்கள் ஒட்டுமொத்த வாழ்க்கையிலும் நீங்கள் நன்மை செய்ய நினைத்தது, வெற்றிகரமான கிறிஸ்தவனாக வாழ பல வருடங்கள் பிரயாசப்பட்டது எல்லாமே வீணே.
- ✓ இப்பொழுது தேவன் உங்களை கிறிஸ்துவோடு கூட சிலுவையிலறைந்தார்.
- ✓ கிறிஸ்து சிலுவையில் மரிக்கும் போது ஒட்டுமொத்த பழைய படைப்புகளும் பிரிந்தன உங்களையும் சேர்த்து.

இந்த சத்தியத்தை நீங்கள் விசுவாசித்து தான் ஆக வேண்டும். உங்கள் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டு உங்கள் பாவங்களை கிறிஸ்து சுமந்தார் மற்றும் உங்கள் உள்ளான மனிதன் கிறிஸ்துவோடு கூட சிலுவையில் மரித்தான் என்பதை உணர வேண்டும்.

- ❖ உங்கள் பாவங்கள் சிலுவை மீது, உங்கள் உள்ளான மனிதனும் சிலுவை மீது.

- ❖ உங்கள் பாவங்கள் எடுக்கப்பட்டாயிற்று, உங்கள் மனிதனும் சிலுவையில் அறையப்பட்டாயிற்று.

- ❖ சிலுவையை பாருங்கள், கிறிஸ்து நிறைவேற்றினார். தேவன் என்னை கிறிஸ்துவுக்குள் உட்படுத்தினார்.

- ❖ கிறிஸ்து மரித்த போது, நானும் மரித்தேன்!

## *1. நாம் சுயத்திற்கு சாக வேண்டும்.*

*கலாத்தியர் 2:20 ல் சொல்லப்பட்டதை புரிந்துகொள்ள உதவும் மற்ற வசனங்களை காண்போம்.*

***மத்தேயு 16:24-27, 24. அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன் 25. தன் ஜீவனை ரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான். 26. மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?27. மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமை பொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார்; அப்பொழுது, அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார்***. ”

***வ**24, இயேசுவுக்கு பின்னால் செல்ல நாம் நம்மை வெறுத்து, சிலுவையை சுமந்து கொண்டு அவரை பின்பற்ற வேண்டும்.*

*சிலுவையை எடுத்துக்கொண்டு என்பதின் அர்த்தம் என்ன"?*

*ஒரு சிலர் இந்த வசனத்தின் அர்த்தமாக நாம் பாரத்தை சுமக்க வேண்டும் என்று போதிக்கின்றனர்.*

*உடல் பலவீனம் என் சிலுவை, என் கணவர் என் சிலுவை என்றெல்லாம் கூறுகின்றனர். இயேசு என்ன சொன்னார் உன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னை பின்பற்று என்றார்.*

*இயேசுவின் சிலுவை அவருக்கு சுமக்க வெறும் பாரமானதாக மட்டும் தான் இருந்ததா?*

*சிலுவை என்பது மரிப்பதற்கான இடம்!*
*இயேசுவின் சிலுவை என்பது அவர் அறையப்பட்டு மரிக்க போகும் இடம்.*

**வ *21*, அதுமுதல் இயேசு, தாம் எருசலேமுக்குப்போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பல பாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்கவேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத்தொடங்கினார்**

*இயேசு எங்கே போகிறார்?*
*அவர் இறக்கப்போகிறார்.*
*இயேசு சிலுவையில் மரிக்கப் போவதாகக் கூறினார்.*

*பின்னர் அவர், நாம் அவருடைய சீஷர்களாக இருக்க விரும்பினால், நாம் நம்மை வெறுக்க வேண்டும், நம்முடைய சிலுவையை எடுத்துக்கொண்டு அவரைப் பின்பற்ற வேண்டும் என இயேசு தம் உயிரை நமக்காகக் கொடுத்தார். இப்போது நாம் அவருக்காக நம் உயிரைக் கொடுக்க வேண்டும்!*

**வ *25*,**
*நாம் இப்பொழுது அவருக்காக உயிரை கொடுக்க மறுத்தால், அதை நமக்காக வைத்துக்கொள்ள முற்பட்டால் அதை நாம் பிறகு ஒரு காலத்தில் இழந்து விடுவோம். அதை நாம் இப்பொழுது அதை இழந்தால், பிறகு அதை பெற்று கொள்வோம். இங்கு நாம் பேசிக்கொண்டு இருப்பது பாரத்தை சுமப்பதை பற்றி அல்ல, உயிரை கொடுப்பது. வாழ வேண்டுமானால் மரித்துதான் ஆக வேண்டும்!*

***வ 26-27,***

*நாம் வாழ்ந்து உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், நியாயத்தீர்ப்பு நாளில் நம்முடைய ஆத்துமாவை இழப்போம். இயேசு நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ள என்ன செய்ய வேண்டும் என பேசிக்கொண்டு இருக்கிறார். நம்மில் பல பேர் பாருங்கள் சுமக்க தயாராய் உள்ளனர், தேவனுக்காக தன்னை மாற்றிக்கொள்ள ஆயத்தமாய் உள்ளனர். ஆனால் எல்லோரும் உயிரை கொடுக்கும் அளவுக்கு ஆயத்தமாய் இல்லை!*

*தேவனை சேவிப்பதில் முழுமையான பக்தியும் அர்ப்பணிப்பும் தேவை. உங்களுக்கு தேவையானதை விட்டு விட்டு, தேவனை பிரியப்படுத்தும் வகையில் உங்கள் வாழ்க்கையை அற்பணியுங்கள். சிலுவையை எடுத்துக்கொண்டு அவரை பின்பற்றுவது என்பது உங்கள் சுயத்தை வெறுத்து அவரோடு கூட சிலுவையிலரயப்படுவது ஆகும். அவர் உங்களுக்காக தன்னையே தந்தது போல, நீங்களும் உங்கள் வாழ்வை அவருக்காய் கொடுங்கள்.*

***கலாத்தியர் 5:24-25, 24. கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். 25. நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம்.***

*கிறிஸ்துவுக்கு சொந்தமானவர்கள் தன்னுடைய நோக்கம், இச்சை மற்றும் சுயத்தை சிலுவையில் அறைய வேண்டும், ஆவிக்குரியவர்களாக வாழ வேண்டும்.*

*நாமெல்லோருக்கும் இயற்கையாகவே ஒரு சில விருப்பங்கள் இருக்கும், அவை தவறானவை அல்ல. ஆனால் அவையே சில நேரங்களில் ஆவியானவர் அவருடைய வேதத்தில் சொல்லப்பட்டவைகளுக்கு கீழ்படியவண்ணம் நம்மை திசை*

*திருப்பும். ஆவியானவரின் பாதையில் நடக்க வேண்டுமானால், இந்த சொந்த விருப்பங்களை சாகடிக்க வேண்டும், அதாவது சுயத்தை சிலுவையில் அறைய வேண்டும்.*

*நமக்கு விறுப்பானதை செய்வது தவறில்லை, ஆனால் அவை நம்மை கட்டுப்படுத்த அனுமதிப்பது தவறு.*

*உங்கள் சுய இச்சைகள் சிலுவையிலரயப்பட்டதா?*
*இல்லை இன்னும் உங்கள் வாழ்க்கையை ஆக்கிரமித்து கொண்டு உள்ளதா?*

*நாம் ஆரம்பித்த வசனத்தை திரும்பவும் பார்ப்போம்.*
***கலாத்தியர் 2:20**,*

*சுயம் கொல்லப்பட வேண்டும், நம்முடைய விருப்பங்களை நிறைவேற்ற முறப்படும் போது அது நாம் தேவனுக்காக அர்ப்பணித்து செயல்படாதவாறு தடுக்கின்றன.*

***2 கொரிந்தியர் 5:15 பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்.***

*நிறைய பேர் தங்களுக்கு விருப்பனவைகளையே தேடுகின்றனர்.*
*" யாரும் நான் என்ன செய்யவேண்டும் என்று எனக்கு சொல்ல கூடாது!"*
*" என் வாழ்க்கை என் கையில் உள்ளது."*

*இந்த ஒரு அணுகுமுறை ஒழியவேண்டும். தேவன் நம்முடைய வாழ்க்கைக்கு அதிபதியாய் இருந்து அவர் நமக்கு எந்த பாதையில் நடக்க வேண்டும் என்று வழிகாட்டுபவராக இருக்க வேண்டும். நாம் அவருக்காய் வாழ வேண்டும், நமக்காக அல்ல.*

*2 கொரிந்தியர் 8:5,* ***மேலும் நாங்கள் நினைத்தபடிமாத்திரம் கொடாமல், தேவனுடைய சித்தத்தினாலே முன்பு தங்களைத் தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக் கொடுத்தார்கள்.***

*சிலுவையிலரயப்பட ஒப்புக்கொடுப்பது என்பது தன்னையே பலியாக தேவனுக்கு கொடுப்பது. இயேசு சிலுவையிலரயப்படும் போது, நமக்கு சேவை செய்யும் வகையில், தன்னையே நமக்காக கொடுத்தார். நாம் அவருடன் சிலுவையிலரயப்படும் போது நாமும் நம்மை அவருக்காக கொடுத்து அவருக்கு சேவை செய்கிறோம்.*

*ரோமர் 12:1-2,* ***1. அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.2. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்***

***லூக்கா 9:23, பின்பு அவர் எல்லாரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து,***

***தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்.***

*மத்தேயு 16:24 ல் கொல்லப்பட்டதற்கு இணையாக இங்கு உங்களுடைய சிலுவையை தினமும் சுமக்க சொல்லுகிறது. பலர் இயேசுவுக்கு வாழ்க்கையில் ஒரு முறை அல்லது பல முறை தங்களை அர்ப்பணிக்கின்றனர். சிலுவையிலரயப்படுவது என்பது உங்கள் சுயத்தை தினமும் நிராகரிப்பது ஆகும். தேவனுக்காக முழுமையாக அர்ப்பணிக்கப்படுவதற்கு இதை தினமும் போராடி மேற்கொள்ளத்தான் வேண்டும்.*

*பலர் நினைக்கிறார்கள், ஏதோ ஒரு காரணத்திற்காக வாழ்க்கையை கொடுப்பது என்பது தான் இருப்பதிலியே உச்சகட்ட பக்தி என்று. பெற்றோர் இல்லாத பிள்ளைகளை காப்பாற்றுவது, அல்லது தீயணைப்பு துறையினர் கட்டிட தீயில் சிக்கியவரை காப்பாற்றுவது இதையெல்லாம் பார்க்கும் போது அவர்கள் தங்கள் வாழ்க்கையில் உச்சகட்ட அர்ப்பணிப்பு செய்து இருக்கிறார்கள் என்பது புரிகிறது.*

*அதை தான் இயேசுவும் நிமிடம் எதிர்பார்க்கிறார்!*
*உச்சகட்ட அர்ப்பணிப்பு.*

*அவருக்காக நாம் மாம்சத்தில் மரிக்க வேண்டிய நிலை வரலாம், இல்லையென்றாலும் நம் வாழ்க்கையை அவருக்காக அர்ப்பணித்து சேவை செய்து வாழவேண்டும்.*

***கலாத்தியர் 2:20*** *சொல்லுகிறது, "* ***இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்,*** *" அவர் நம்முடைய இடத்தில் இருந்தால் எப்படி வாழ்ந்து இருப்பாரோ அப்படிப்பட்ட வாழ்க்கையை நாம் வாழ வேண்டும். அவர்*

*எனக்காக மரித்தார்: எனவே நான் அவரை என்னில் வாழ அனுமதிக்க வேண்டும்.*

*இப்பொழுது கேள்வியை திரும்பவும் பார்ப்போம்.*
*" உங்கள் கைகளிலும் கால்களிலும் ஆணி கடாவப்பட்டதா?"*

## *2. மனுஷர் சித்தத்திற்கு நாம் மரிக்க வேண்டும்.*

*பல பேர் தேவனுக்கு சேவை செய்வதில் தவறுகின்றனர் ஏனென்றால் அவர்கள் தங்களுக்கு விருப்பமானதை செய்கின்றனர். இன்னும் சில பேர் மற்றவர்களின் விருப்பத்திற்கு செவி சாய்ப்பதினால் தோல்வி பெறுகின்றனர்.*
*இதை நாம் இரண்டு இடங்களில் நிறைவேற்ற பார்க்கலாம்.*

*மனிதர் கற்பனைக்கு பதிலாக தெய்வீக கற்பனைக்கு பின்னால் நாம் செல்ல வேண்டும்.*
***கொலோசெயர் 2:20, நீங்கள் கிறிஸ்துவுடனேகூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால், இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள்போல —***

*உலக வழிபாடுகளுக்காக கிறிஸ்துவோடு கூட மரித்தோம். இது மனித கற்பனைகளுக்கு செவி சாய்ப்பதை குறிக்கிறது (வசனம் 22).*

***கொலோசெயர்2:8, லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டுபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலக வழிபாடுகளையும் பற்றினதேயேல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல.***

*கிறிஸ்தவர்கள் அதற்கு பதிலாக கிறிஸ்துவுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.*

***மத்தேயு 15:9, மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப்போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார். ”***

*மனித கட்டளைகளின் படியான ஆராதனை வீணே.*
*உலகில் எந்த வகையிலும் மனித கட்டளைகளுக்கு கீழ்ப்படிய கூடாது என்று அர்த்தம் அல்ல.*

*இயேசு சொல்லுகிறார்*

- ✓ *குடிமக்கள் தேசத்தின் சட்டதிட்டங்களுக்கு கீழ்படியவேண்டும்,*
- ✓ *பிள்ளைகள் பெற்றோருக்கு கீழ்ப்படிய வேண்டும், மற்றும்*
- ✓ *மனைவிகள் கணவர்களுக்கு கீழ்படிந்திருக்க வேண்டும்.*

*ஆனால் மனிதர்களுடைய கட்டளைகளுக்காக தேவனுடைய சித்தத்திற்கு எதிராக செயல் பட கூடாது. தேவன் தன்னுடைய விதிமுறைகளை வேதாகமத்தில் கொடுத்துள்ளார். அவர் அங்கீகரித்ததற்கு மீறி நாம் எதையும் செய்ய கூடாது.*

- ❖ *நாம் ஏன் மரியாள் அல்லது போப்பிற்கு வணங்கக்கூடாது?*
- ❖ *நாம் மனிதனால் ஏற்படுத்தப்பட்டவைகளை ஏன் பின்பற்ற கூடாது?*
- ❖ *குழைந்தைகள் மீதான தண்ணீர் தெளிப்பு ஞானஸ்தானத்தை நாம் ஏன் ஏற்றுக்கொள்ள கூடாது?*

❖ ஆராதனைகளில் நாம் ஏன் இசையின் மூலம் மக்களை மெய்சிலிர்க்க வைக்க கூடாது?
❖ நாம் ஏன் போதகர்களை ரெவெரென்ட் மற்றும் பல பட்டங்களில் அழைக்க கூடாது?
❖ மனிதனால் ஏற்படுத்தப்பட்ட பயிற்சி கூடங்களுக்கு சபை ஏன் உதவி செய்ய கூடாது?
❖ சபை ஏன் பொழுது போக்கு மற்றும் புதிதான காரியங்களில் ஈடுபட கூடாது?

*இவை எல்லாம் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட மதங்களை சார்ந்தவை.*
*தேவனுடைய வார்த்தை இவைகளை செய்ய சொல்லவே இல்லை.*
*அவைகளுக்கு நாம் சமர்ப்பணம் செய்ய கூடாது நாம் கிறிஸ்துவோடு மரித்து விட்டோம்!*

*இவைகளை ஏற்படுத்தின மனிதன் நமக்காக மரிக்கவில்லை, ஆனால் கிறிஸ்து நமக்காக மரித்தார். எனவே மனுஷரின் சித்தத்தை செய்ய நம்முடைய வாழ்க்கையை சமர்ப்பிக்க கூடாது, மாறாக நமக்காக தன்னையே தந்து மரித்த கிறிஸ்துவுக்கு வாழ்க்கையை சமர்ப்பித்து அவர் சித்தம் செய்ய வேண்டும்.*

*மரணம் என்பது பிரிவு ஆகும். நாம் மனிதனின் கற்பனைகளிலிருந்து பிரிந்து அவைகளுக்கு கீழ்ப்படிய மறுக்க வேண்டும். அதற்கு பதிலாக தலையாகிய இயேசுவை பின்பற்ற வேண்டும் (கொலோசெயர் 2:19).*

*எனவே நாம் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட மதம் சார்ந்த செய்கைகளுக்கு கீழ்படிகிறோமா அல்லது அப்படி செய்கிறவர்களோடு ஐக்கியம் வைத்து உள்ளோமா?*

*அப்படியானால் நாம் கிறிஸ்துவோடு கூட சிலுவையிலரயப்பட கற்க வேண்டும்.*

*நாம் தேவனை பிரியப்படுத்த வேண்டும்.*

***கலாத்தியர் 6:14, நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்***

*ஏனென்றால் கிறிஸ்து எனக்காக மரித்தார், உலகம் எனக்கு சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன். இதன் அர்த்தம் என்னவென்றால் நான் உலகம் கொடுக்கும் அழுத்தத்திற்கு அடிபணிந்து செல்ல கூடாது, அவைகள் என்னை தேவனுக்கு கீழ்படியாமற்போக வழிவிலக்கி விடும்!*

*நண்பர்கள் உறவினர்கள் நாம் பாவத்தில் ஈடுபட விரும்பலாம். அவர்களின் தப்பிதங்களுக்கு நாம் உடன் போகாததால் நம்மை வேடிக்கையாக பார்க்கலாம், அல்லது துன்புறுத்தலாம். நமக்கும் அந்த கூட்டத்துடன் போக வேண்டும் போல இருக்கலாம். நாம் அப்படிப்பட்ட உந்துதலுக்கு சிலுவையிலரயப்பட்டவர்களாய் இருக்க வேண்டும், எனவே அவர்கள் நம்மை தேவனுக்கு கீழ்படியாமற் போக வாய்ப்பு இல்லாமல் போகும்.*

***யோவான் 12:42- 43, 42. ஆகிலும் அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும் ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்கப்படாதபடி, பரிசேயர் நிமித்தம் அதை அறிக்கைபண்ணாதிருந்தார்கள்.43. அவர்கள்***

***தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்.***

*யூத அதிகாரிகள் இயேசுவின் மேல் விசுவாசம் வைத்தார்கள், ஆனால் அதை அவர்கள் பகிரங்கமாக அறிக்கையிடவில்லை. ஏனென்றால் அவர்கள் தேவனால் வரும் மகிமையிலும், மனுஷரால் வரும் மகிமையை விரும்பினார்கள்.*

***மக்களுக்கு விருப்பமானதை செய்வது எப்போதும் தவறாகாது. ஆனால் அப்படி செய்வது தேவனுக்கு பிரியமாய் இராமல் அல்லது சத்தியத்திற்காக நிற்காதபடி செய்ய தூண்டுமானால் அது தவறு தான்.***

***மத்தேயு** *10:34-39, '34.* **பூமியின்மேல் சமாதானத்தை அனுப்பவந்தேன் என்று எண்ணாதிருங்கள்; சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்பவந்தேன்.***35.* ***எப்படியெனில், மகனுக்கும் தகப்பனுக்கும், மகளுக்கும் தாய்க்கும், மருமகளுக்கும் மாமிக்கும் பிரிவினை உண்டாக்க வந்தேன்.***36.* ***ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே.***37.* ***தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல.***38.* ***தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல.***39.* ***தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான்***

- ✓ *நம்முடைய ஜீவனை இழப்பது,*
- ✓ *சிலுவையை சுமப்பது மற்றும்*
- ✓ *கிறிஸ்துவை பின்பற்றுவது*

*இவைகளை மீண்டும் இங்கே பார்க்கமுடிகிறது. அந்நிய காரியங்கள் நமக்கு மிகவும் பிரியமானவர்கள் மூலமே வந்தாலும் நாம் தேவனுக்கு தான் சேவை செய்ய வேண்டும். நாம் இந்த தியாகத்தை கூட செய்யவில்லை என்றால், தேவன் நம்மை தேர்ந்தெடுத்ததற்கு நாம் தகுதியில்லாதவர்கள் ஆகி விடுவோம்.*

*நம்முடைய சபைகளில் என்ன பிரச்சனை என்றால் அழுத்தம் கொடுத்தால் தாங்கிக்கொள்ள முடியாத முதுகெலும்பில்லாத மக்கள் இருப்பதால் தான். அவர்கள் பாவத்திற்கும் எதிர்த்து நிற்க மாட்டார்கள், கூடுமானால் சத்தியத்தை விட்டு அன்பானவர்களை விலக செய்வார்கள்.*

---

***நாம் தேவனுடைய சித்தத்தை தான் நிறைவேற்ற பார்க்க வேண்டும் மனுஷனுடைய சித்தத்தை அல்ல!***

---

***அப்போஸ்தலர் 5:29, அதற்குப் பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும்: மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது.***

- *நாம் பாவத்தை பயிற்சி செய்வதை தவிர்க்க வேண்டும்,*
- *பாவத்தோடு உள்ள ஐக்கியத்தை தவிர்க்க வேண்டும் மற்றும்*
- *நாம் அதற்கு எதிர்த்து பேச வேண்டும்.*

*அவை நம்மை நம்முடைய நெருங்கியவர்களை சேர்த்து, மனிதனுடைய விருப்பத்திற்கு சாக வைக்கும்.*

*எனவே கேள்வியை ஒருமுறை திரும்பி பாருங்கள்:*

***" உங்கள் கைகளிலும் கால்களிலும் ஆணிகள் துளையிட்ட அடையாளம் உள்ளதா?"***